# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2017ஆம் ஆண்டு ஜுலை மாதம் 31ம் நாள் திங்கள் கிழமை காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| | 1) தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள், கேளிக்கை வரிச் சட்டம் 2017 (தமிழ்நாடு சட்டம் 20/2017) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணை எண். 68 நாள் 29.6.2017ல் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளில் அமைந்துள்ள திரையரங்குகள், கேளிக்கை விடுதிகள், கட்டணம் வசூலித்து நடத்தப்படும் போட்டிகள் மற்றும் பந்தயங்கள் போன்றவற்றிற்கான கேளிக்கை வரிகளை 01–07–2017 முதல் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு செலுத்திடும் வகையில் ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மற்றும் சட்டம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் பதிவு செய்யலாம்.<br><br>அ1/2814/2017 | 51) பதிவு செய்யப்பட்டது. |
| | 2)தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட 36வது வார்டு ஜெயராஜ் நகர் பகுதி தெருவிற்கு புதிய தெருவிளக்குகள் 8 எண்ணிக்கை அமைத்துக்கொடுக்க ரூ. 40000/–ஐ கடந்த 24.11.2003ல் இவ்வலுவலக கடிதம் எண். ஜி1.379/2002 நாள் 19.11.2003ன் படி மனைப்பிரிவுதாரரால் செலுத்தப்பட்டு இதே எண்ணிட்டு 12.4.2004ம் தேதிய ஆணையரின் செயல்முறையில் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தற்போது மேற்படி நகர் தெருவில் குடியிருப்புகள் முழுமையாக கட்டப்பட்டுள்ளதால் இரவு நேரங்களில் பொதுமக்கள் மிகுந்த சிரமத்தில் இருந்து வருவதாக குடியிருப்போரால் தெரிவிக்கப்பட்டு தெருவிளக்குகள் அமைக்க கோரப்பட்டுள்ளது. மேற்படி ஜெயராஜ் நகர் | 52) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | தெருப்பகுதியில் புதியதாக 8 எண்ணிக்கை புதிய தெருவிளக்குகளை அமைத்துக்கொடுக்கவும், மின்வாரியத்திற்கு விண்ணப்பித்த மின்வாரியம் கோரும் மதிப்பீட்டு தொகையை அன்னாருக்கு செலுத்தவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண். 1396/17/இ3 | |
| | 3)தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள முக்கிய கோயில் திருவிழாக்களுக்கு கோரிக்கைகளின் அடிப்படையில் மாநகராட்சி லாரி (10000லி கொள்ளளவு கொண்டது) மூலம் குடிநீர் விநியோகம் செய்ய லோடு ஒன்றுக்கு ரூ.2000/— வீதம் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது.<br><br>தற்போது வாகன எரிபொருள் விலையேற்றம் மற்றும் பராமரிப்பு செலவினத்தை கருத்தில் கொண்டு கீழ்க்கண்டவாறு கட்டணம் மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ளது. | 53) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| வ.எண் | பொருள் | ஏற்கனவே வசூலிக்கப் பட்டது | தற்போது மாற்றியமைக்கப் படும் கட்டணம் |
|---|---|---|---|
| 1 | 10000லிட்டர் கொள்ளளவு கொண்ட மாநகராட்சி லாரி டேங்கர் மூலம் குடிநீர் விநியோகம் செய்தலுக்கு | ரூ.2000/— | 3000/— |

எனவே மேற்படி கட்டணம் மாற்றம் செய்து வசூலிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம். இ2/02901/17

| | | |
|---|---|---|
| | 4) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்கள் 2,5,7,8,9,10, 11,12,13,14,15,16,22,23,24,25,26,27,28,29,30,36,37,38,39,40,41,42,43 ,44,45,46,47,49,55,57 பகுதிகளில் வசிக்கும் அனைத்து மக்களும் 100 விழுக்காடு கழிப்பறைகளை மட்டுமே பயன்படுத்தி வருகின்றனர். திறந்த வெளியினை கழிப்பிடமாக பயன்படுத்துவதில்லை. இப்பகுதியில் அமைந்துள்ள பள்ளி மாணவ / மாணவிகளிடமும் அவர்கள் படிக்கும் பள்ளிகளிலும் மற்றும் அவர்களின் வீடுகளிலும் கழிப்பறையைத்தான் பயன்படுத்தி வருகிறோம் என உறுதிமொழி கடிதங்கள் பெறப்பட்டுள்ளது. இம்மாநகரங்களில் இயங்கும் சுய உதவிக்குழுக்கள் மூலமும் | 54) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | அவர்கள் பகுதியில் வசிக்கும் அனைத்து மக்களும் கழிப்பறையைத்தான் பயன்படுத்தி வருகின்றோம் என உறுதிமொழி கடிதங்கள் பெறப்பட்டுள்ளது. இதன் விபரம் மாமன்றத்தின் 28.12.2016ம் தேதிய தீர்மானம் மூலம் பதிவு செய்யப்பட்டது.<br><br>மேலும் நாளிதழ்களிலும் மேற்படி பகுதிகளில் உள்ள மக்கள் திறந்த வெளியினை கழிப்பிடமாக பயப்படுத்துவதில்லை எனவும் ஏதேனும் ஆட்சேபணை இருந்தால் தெரிவிக்கலாம் என அறிவிப்பு செய்யப்பட்டது. எந்த வித ஆட்சேபனைகளும் வரப்பெறவில்லை. மேலும் மேற்படி பகுதிகள் தொடர்ந்து துப்புரவு அலுவலர்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.<br><br>எனவே மேற்படி நடவடிக்கைகளின் அடிப்படையில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் அனைவரும் கழிப்பறைகளைதான் 100 விழுக்காடு பயன்படுத்தி வருகின்றனர் என்றும் திறந்தவெளியினை பயன்படுத்தவில்லை என பிரகடனப்படுத்த மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம். ந.க.எண். 5390/2016/எச்3 | |
| | 5)தூத்துக்குடி மாநகராட்சியானது மத்திய அரசால் மிடுக்கான நகரம் (Smart City) என தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில், பொதுமக்களின் வசதிக்காக பல்வேறு அடிப்படை கட்டமைப்பு வசதிகளை நவீன முறையில் செயல்படுத்த மாநகராட்சி நிர்வாகம் பல்வேறு வகையில் செயல் திட்டம் தயார் செய்து வருகிறது.<br><br>மேற்படி செயல்திட்டம் முழு வடிவம் பெற்று நடைமுறைப்படுத்த ஏதுவாக தொழில்நுட்ப பாடப்பிரிவில் பயின்றுள்ள ஆர்வம் மிக்க இளைஞர்களை இப்பணியில் இணைத்து செயலாற்ற மாநகராட்சியால் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பணியில் கீழ்க்காணும் கல்வித்தகுதி வாய்ந்த இளைஞர்களை மூன்று மாத காலத்திற்கு மட்டும் Internship முறையில் பணியாற்ற தேர்வு செய்ய வேண்டியுள்ளது. | 55) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| வ.எண் | கல்வித் தகுதி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | BE/ME Civil Engineer | 2 |
| 2 | B.Arch/M.Arch | 2 |
| 3 | BE Computer Science/ M.Sc Computer Science/ M.Tech Computer Science/ (IT Computer Science) BE(IT), ME(IT) | 2 |
| | **Total** | **6** |

எனவே மேற்படி கல்வித்தகுதி வாய்ந்த ஆறு நபர்களை ஸ்மார்ட்சிட்டி தொடர்பாக மாநகராட்சி நிர்வாகம் தயார் செய்திடும் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு மாநகராட்சி பணி குறித்து உரிய பயிற்சியினை Internship முறையில் மூன்று மாதம் மட்டும் பணிபுரிய உரிய விதிகளுக்குட்பட்டு அனுமதித்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

ஸ்மார்ட் சிட்டி தொடர்பான மாநகராட்சி பணிகளின் அவசர அவசியம் கருதி கல்வி தகுதி வாய்ந்த நபர்களை Internship முறையில் பணிபுரிய அனுமதிக்கலாம்.

இ1/3209/15

| | | |
|---|---|---|
| | 6)நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 22.05.2012ம் தேதிய 48ம் எண்ணிட்ட அரசாணையில் இம்மாநகராட்சிக்கு உதவி ஆணையர் பணியிடம் தோற்றுவித்தும் அதனை 1996ம் வருடத்திய மாநகராட்சி பொது பணி விதிகளின்படி பூர்த்தி செய்யுமாறு ஆணையிடப்பட்டுள்ளது.<br><br>மாநகராட்சி பணிவிதிகளின்படி உதவி ஆணையர் பணியிடங்கள் கீழ்க்கண்டுள்ளவாறு நிரப்பப்பட வேண்டும். | 56) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| வ.எண் | பணியிடத்தின் பெயர் | நியமன முறை |
|---|---|---|
| 1 | உதவி ஆணையர் (பணியமைப்பு) | 1) வகுப்பு II அலுவலரை பதவி உயர்வு மூலமாக நிரப்பப்பட வேண்டும் (அல்லது)<br>2)உதவி ஆணையர் (வருவாய்) (கணக்கு) மற்றும் (வார்டு அலுவலகம்) உதவி ஆணையரை மாறுதல் மூலம் நிரப்பப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| | | 3)வகுப்பு IIல் நிர்வாக அலுவலர் பணியிடத்தில் இரண்டு வருட பணி முடித்திருத்தல் வேண்டும்.<br>4)ஓய்வு பெறுவதற்கு 1 வருடத்திற்கு மேல் பணிக்காலம் இருத்தல் வேண்டும். |
| 2 | உதவி ஆணையர் (கணக்கு) | 1) வகுப்பு II அலுவலரை பதவி உயர்வு மூலமாக நிரப்பட வேண்டும். (அல்லது)<br>2)உதவி ஆணையர் (நிர்வாகம்) (வருவாய் ) மற்றும் (வார்டு அலுவலகம்) உதவி ஆணையரை மாறுதல் மூலம் நிரப்பப்பட வேண்டும.<br>3) வகுப்பு IIல் இரண்டு வருட பணி முடித்திருத்தல் வேண்டும்.<br>4) ஓய்வு பெறுவதற்கு 1 வருடத்திற்கு மேல் பணிக்காலம் இருத்தல் வேண்டும். |
| 3 | உதவி ஆணையர் (வருவாய்) | 1) வகுப்பு II அலுவலரை பதவி உயர்வு மூலமாக நிரப்பப்பட வேண்டும் (அல்லது)<br>2) உதவி ஆணையர் (நிர்வாகம்) (கணக்கு) மற்றும் (வார்டு அலுவலகம்) உதவி ஆணையரை மாறுதல் மூலம் நிரப்பப்பட வேண்டும்<br>3) வகுப்பு IIல் இரண்டு வருட பணி முடித்திருத்தல் வேண்டும்<br>4)ஓய்வு பெறுவதற்கு 1 வருடத்திற்கு மேல் பணிக்காலம் இருத்தல் வேண்டும். |

இம்மாநகராட்சிக்கு புதிதாக தோற்றுவிக்கப் பட்ட உதவி ஆணையர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து 22.05.2012 முதல் காலியாக உள்ளது. இம்மாநகராட்சியில் தற்போது வகுப்பு II ல் நிர்வாக அலுவலராக பணிபுரியும் திரு.து. சந்திரமோகன் நிர்வாக அலுவலர் பணியிடத்தில் 08.06.2015 முதல் இரண்டு வருடங்களுக்கு மேல் பணிபுரிந்துள்ளார். மாநகராட்சி பணிவிதிகளின்படி உதவி ஆணையர் பணியிடத்திற்கு பதவி உயர்வு பெறுவதற்கான அனைத்து தகுதிகளும் பெற்றுள்ளார். எனவே திரு. சந்திரமோகன் என்பதை உதவி ஆணையராக பதவி உயர்வு அளிக்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1981ம் வருடத்திய கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் விதி 106(1) (2) ன் படி உதவி ஆணையர் பணியிடமானது அரசால் நியமனம் செய்யப்படவேண்டிய பணியிடமாகும். எனவே திரு.து. சந்திரமோகன் நிர்வாக அலுவலரை ரூ 15600–39100 – தர ஊதியம் ரூ 5700/– என்ற ஊதிய ஏற்ற முறையில் உதவி ஆணையர் (பணியமைப்பு) பணியிடத்திற்கு பதவி உயர்வு அளித்து நியமனம் செய்வதற்கு அரசுக்கு பிரேரணை அனுப்பி வைக்க மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

சி1/2454/2017

| | | |
|---|---|---|
| | 7) தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதிகளில் கொசுப்புழுக்களை அழிக்க பயன்படுத்தப்படும் Pyrethrum 2% Extract என்கிற கொசுப்புகை மருந்து மற்றும் Temephos ஆகிய கொசு ஒழிப்பு மருந்து தற்போது மிகக் குறைந்த அளவே உள்ளது. எனவே, மாநகராட்சியிலுள்ள 60 வார்டு பகுதிகளுக்கும் கொசு மருந்து அடிக்க தேவைப்படுவதால், கொசுப்புழுக்களை ஒழிக்கக்கூடிய Pyrethrum 2% Extract மற்றும் Temephos மருந்தினை தமிழ்நாடு மெடிக்கல் சர்வீஸ் கார்ப்பரேசன் நிறுவனத்தின் அனுமதி பெற்ற M/s.Paramount Pesticides Limited நிறுவனத்திடம் பைரித்திரம் லிட்டர் 1க்கு ரூ. 993/– வீதம் 750 லிட்டரும் மற்றும் M/s.Heraba | 57) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | Industries Lmited நிறுவனத்தின் மூலம் Temephos லிட்டர் வாங்குவதற்கு அனுமதியும், அதற்காகும் செலவுத் தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம். எச்2/7958/13 | |
| | **8)** **2017–18** ஆண்டுக்கான சட்டப்பேரவை அறிவிப்பு எண். **12**ல் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்து வரும் துப்புரவு பணியாளர்களுக்கு மாநகராட்சி நிதியின் கீழ் சிறப்பு ஆயுள் காப்பீட்டுத்திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான அரசாணை வெளியிட அரசுக்கு பிரேரணை அனுப்புவதற்கு இது தொடர்பாக அந்தந்த மாநகராட்சிகளில் உரிய மன்ற தீர்மானத்துடன் பிரேரணை அனுப்பி வைக்க சென்னை நிதி ஆலோசகர், நகராட்சி நிர்வாக ஆணையரக கடிதம் ந.க.எண். 16140/2017/எல்ஏ2, நாள் 05.07.2017ன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>அதன்படி தூத்துக்குடி மாநகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் அந்தந்த பகுதிகளிலுள்ள தெருக்களில் சேரும் குப்பைக் கழிவுகள், தூசி மணல்கள், சந்தை மற்றும் பேருந்து நிலையங்களில் சேரும் திடக்கழிவுகளை அகற்றுதல், மழைநீர் வடிகால்களில் தேங்கும் அடைப்புகளை நீக்குதல் போன்ற அத்தியாவசிய அடிப்படைப் பணிகளை செய்து வருவதால் அடிக்கடி உடல் நலக்குறை ஏற்படுவதால், தூத்துக்குடி மாநகராட்சி துப்புரவு பணியாளர்களுக்கு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்புடன் சிறப்பு ஆயுள் காப்பீட்டு திட்டம் செயல்படுத்துவது தொடர்பாக அரசுக்கு பிரேரணை அனுப்ப மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம். எச்2/3173/17 | 58) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி